(ஓ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியைப் போக்க வைகை நீரைத் திறந்துவிட வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி நிலவுவதால் வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

வைகை அணையில் வைகை கணக்கில் 387 மில்லியன் கன அடி நீர் இருப்பில் உள்ளது. இராமநாதபுரம் மாவட்ட பகுதிகளுக்கு தண்ணீர் அனுப்ப குறைந்தது வினாடிக்கு 2000 கன அடிகள் என்ற அளவில் குறைந்தது 5 நாட்கள் தண்ணீர் விடப்பட வேண்டும். இதற்கு 850 மி. க. அடியாவது வைகை கணக்கில் இருக்க வேண்டும். இருப்பில் உள்ள 387 இரண்டு நாட்களுக்குத் தான் வரும். இது இராமநாதபுரம் மாவட்டத்தின் பகுதிகளுக்குச் சென்று பயன் கொடுக்காது.

மேலும் வைகை கணக்கில் உள்ள நீர் மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். எனவே வைகை கணக்கில் தற்போது சேர்ந்துள்ள இருப்பு நீர் முழுவதையும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டுமே பகிர்ந்தளிக்க இயலாது.

பெரியாறு நீர்த் தேக்கத்திலும் தற்போது 2800 மில்லியன் கன அடி நீரே உள்ளது. வைகை நீர்த்தேக்கத்தில் பெரியாறு பாசன அமைப்புக் கணக்கில் 3000 மில்லியன் கன அடி நீர் உள்ளது. இதையும் சேர்த்தால் பெரியாறு பாசன அமைப்புக் கணக்கில் 5800 மில்லியன் கன அடி நீர் உள்ளது. இந்த இருப்பு நீர் பெரியாறு பாசன அமைப்பின் முழுத் தேவைக்கே போதுமானதாக இல்லை.

பெரியாறு மற்றும் வைகை நீர்த் தேக்கங்களில் நீர் இருப்பு திருப்திகரமாக இல்லாத நிலையில், மேற்கூறிய காரணங்களினால் இராமநாதபுரம் மாவட்ட பகுதிகளுக்கு தண்ணீர் அனுப்ப இயலாது. இந்திய வானிலைத் துறையினர் தென் மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ மழையினால் பலத்த மழை பொழியும் எனக் கணித்துள்ளனர். எனவே எதிர்வரும் நாட்களில் இரு நீர்த்தேக்கங்களிலும் நீர் இருப்பு கணிசமாக அதிகரித்தால் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தண்ணீர் திறந்துவிடுவது குறித்த சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ், கேள்வி கேட்க வேண்டும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் ராமநாதபுரம் மாவட்டத்தினுடைய பங்கு 387 மில்லியன் கன அடி என்றும், ராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தண்ணீர் வர வேண்டுமென்றால் 850 கன அடியாவது தேவைப்படும் என்றும், எதிர்வரும் காலங்களில் பெருத்த மழை பெய்து, நீர் வரத்து அதிகரித்தால் இது பற்றி ஆராயப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. 1967-ல் வைகை அணை கட்டுவதற்கு முன்பு வைகையினுடைய தண்ணீர் அனைத்தும் ராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பயன்பட்டது, குடிநீருக்கும், விவசாயத்திற்கும் பயன்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன கேள்வி, அதைக் கேளுங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: இப்போது ராமநாதபுரம் மாவட்டத்திற்கு வர வேண்டிய நீரின் அளவைக் குறிக்கும் பொறுப்புக்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு ஈ.ஈ.யும் மதுரை மாவட்டத்திற்கு தனியாக ஒரு ஈ.ஈ.யும் போடுவதற்கு துறை நடவடிக்கை எடுக்குமா?

முற்பகல் 12-45

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையில் எல்லா விவரமும் வைத்திருக்கிறேன். ஆகவே அதற்குள் போக விரும்பவில்லை. இன்றைக்கு இருக்கிற நீர் இருப்பைப் பொறுத்து எப்படி ராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தண்ணீர் விட முடியாது என்பதைச் சொல்லியிருக்கிறேன். ஏனென்றால் பெரியாறு—வைகை நீர்ப்பாசனத் திட்டம் என்பது மூன்று மாவட்டங்களை,

உள்ளடக்கியது. மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம். அதிலே மதுரை மாவட்டத்திற்குரிய பங்கு இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்குரிய பங்கு இருக்கிறது. முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்குரிய பங்கு இருக்கிறது. அந்த விதிகளை மீறி நாம் தண்ணீரைத் திறக்க முடியாது. ஏனென்றால் மதுரையிலே பெரியாறு பாசனத்தில் இருக்கிற விவசாயிகள் இன்றைய தினம் விவசாயத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நிர்ணயித்த அளவைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டு மழை அதிகமாக இருந்தது. ஆகவே அதிகமாகத் தண்ணீர் திறந்து விட்டோம். ஆகவே அதற்காக வைத்திருக்கின்ற நிர்ணயங்கள் அந்த முறைகள் படிதான் தண்ணீர் விடப்படும். ஆகவே எதிர்காலத்திலே மழை அளவைப் பொறுத்துத் தான் தண்ணீர் விட முடியும். அப்படி ஏதாவது கடுமையான குடிநீர்ப் பிரச்சினை வருகிறபோது, அரசு அதுபற்றி அதிகாரிகளோடு கலந்துபேசி பரிசீலிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஔ) கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் விஞ்ஞானக்கூடம் கட்டும் பணி முடிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கே. முனிவெங்கடப்பன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1984ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞானக் கூடக் கட்டிடம், கட்டி முடிக்கப்படாமல் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு வகுப்பறையுடன் கூடிய ஆய்வகக் கூடம் கட்டுவதற்கு ஏற்கனவே ரூ. 1,57,140 அனுமதி அளித்து ஆணை வழங்கப்பட்டது.